சுருக்கம்

காஞ்சிபுரம் மாவட்டம் – மாமல்லபுரம் பேரூராட்சி – 110 மீட்டர் நீளமுள்ள பாடசாலை தெருவினை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை

அரசாணை (நிலை) எண். 94 **நாள்: 19.5.2010**

5, வைகாசி, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

பேரூராட்சிகளின் இயக்குநரின் ந.க.எண் 15055/2009/ஆ1
நாள் 10.08.2009 மற்றும் 07.9.2009

ஆணை:

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சியில் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் இந்திய நாட்டிய விழாவைத் தொடர்ந்து, இந்நிகழ்ச்சி நடைபெறும் 12 வது வார்டில் உள்ள பாடசாலைத் தெருவினை அகலப்படுத்தியும், அனைத்து தரப்பு மக்களை குறிப்பாக வெளிநாட்டினரை கவரக்கூடிய வகையில் சாலை, அலங்கார மின் விளக்குகள் நடைபாதைகள் ஆகிய வசதிகளை செய்து தரும்படி பாடசாலை தெருவினை நெடுஞ்சாலை துறையினருக்கு ஒப்படைக்க அரசு சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை செயலர் அவர்களால் ஸ்தல ஆய்வின் போது வலியுறுத்தப்பட்டு நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் அவர்களாலும் இது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டு இதனைத் தொடர்ந்து மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பாடசாலைத் தெருவை மேற்படி பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நெடுஞ்சாலைத் துறையினருக்கு, பேரூராட்சி மன்றத் தீர்மானத்துடன் ஒப்படைத்து பின்னர் பணிகள் முடிவுற்றதும் பேரூராட்சிக்கு மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என அரசு செயலர், நெடுஞ்சாலைத் துறை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. இது குறித்து, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, தலைமைப் பொறியாளர் (பொது) தமது அறிக்கையில், மாமல்லபுரம், பாடசாலைத் தெரு, (110 மீ.) சாலையினை இதர மாவட்ட சாலையாக மேம்பாடு செய்து நெடுஞ்சாலை துறையால் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும், தற்போது 3.75 மீ. அகலம் கான்கிரீட் சாலையாக இருப்பதால், சாலையின் இருமருங்கிலும் வடிகால் வசதி செய்து 3.75 மீ.அகலம் போக மீதமுள்ள சாலையில் கான்கிரீட் தளம் அமைக்க ரூ.16.00 இலட்சம் தோராய மதிப்பீடு ஆகும் என்றும், மேற்படி பாடசாலைத் தெருவினை (110 மீ) மேம்பாடு செய்து நெடுஞ்சாலை துறையால் நிரந்தரமாக பராமரிக்க உரிய ஆணை வழங்குமாறு கோரியதனால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முன்னிலையில் நடத்திய கூட்டு விவாதம் மற்றும் ஆய்வின் போது பாடசாலை தெருவினை நெடுஞ்சாலை துறைக்கு அத்தெருவினை மேம்படுத்தும் பொருட்டு ஒப்படைக்குமாறும், அதற்கேற்ப தக்க தீர்மானம் நிறைவேற்றிய பின் அவ்வாறு செய்யுமாறு மகாபலிபுரம் பேரூராட்சி கோரப்பட்டு, அனைத்து வசதிகளையும் நெடுஞ்சாலைத் துறையினர் மூலம் செய்து, அத்துறையின் பராமரிப்பிலேயே நிரந்தரமாக

அவர்களது பொறுப்பிலேயே வைத்துக் கொள்ள ஒப்படைக்கலாம் என மன்றம் தீர்மானம் (எண். 347, நாள் 07.8.2009) இயற்றியது. பேரூராட்சிகளின் இயக்குநர் உரிய ஆணை வேண்டி, திருத்திய கருத்துருவினை அரசிற்கு அனுப்பியுள்ளார்.

3. பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சிக்கு சொந்தமான, 12 வது வார்டில் உள்ள பாடசாலைத் தெருவினை அகலப்படுத்தியும், அலங்கார மின் விளக்குகள் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் போன்ற வசதிகளை நெடுஞ்சாலைத் துறை மூலம் செய்து, அத்துறையின் பராமரிப்பிலேயே நிரந்தரமாக வைத்துக் கொள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு அதனை ஒப்படைக்க அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம்
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர், காஞ்சிபுரம்.
செயல் அலுவலர், மாமல்லபுரம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலரின் தனி செயலர், ந.நி(ம)கு.வ.துறை, சென்னை 9.
ந.நி.(ம)கு.வ.(அந.2) துறை, சென்னை – 9.
உதிரி/நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.